செ.வெ.எண்: 18/அக்டோபர் நாள்: 12.10.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## உர விற்பனை நிலையங்களில் விதி மீறல்கள் ஏதும் கண்டறியப்பட்டால் உர உரிமம் இரத்து செய்யப்படும்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் (பொ) திரு.ஆ.ம.காமாட்சி கணேசன் அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சம்பா பருவ நெல் விதைப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில், நாளது தேதி வரை 543 மீ.மி மழை பெய்துள்ளது. இதுவரை 1,08,000 எக்டரில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது நெற்பயிர் விதைப்பு முதல் 25 நாட்கள் பயிராக உள்ளது. இந்நேரத்தில் அடியுரமாக இடுவதற்கு தேவைப்படும் யூரியா, டி.ஏ.பி, பொட்டாஷ் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனையாளர்களிடம் இருப்பு வைத்து விவசாயிகளுக்கு தங்குதடையின்றி வழங்க மாவட்ட நிர்வாகம் அனைத்து நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 134 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் 127 தனியார் உர விற்பனை நிலையங்கள் உள்ளன. அனைத்து விவசாயிகளுக்கும் உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985 மற்றும் அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955ன் படியும் PoS (Point of Sale) கருவி மூலம் மானிய உரங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது உரத்தட்டுப்பாடு ஏதுமில்லை விவசாயிகள் அனைவருக்கும் உர விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் இன்றைய தேதியில் யூரியா 2416 மெ.டன்னும் டி.ஏ.பி 1240 மெ. டன்னும், பொட்டாஷ் 172 மெ.டன்னும் காம்ப்ளக்ஸ் 1306 மெ.டன்னும் சூப்பர் பாஸ்பேட் 127 மெ.டன்னும் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. உரங்களை அரசு நிர்ணயம் செய்துள்ள அதிகபட்ச விலையான யூரியா 45கிலோ மூடையின் விலை 266.50க்கும், டி.ஏ.பி 50 கிலோ மூடையின் விலை ரூ.1200க்கும் மிகாமல் விற்பனை செய்யப்பட வேண்டும். இதர உரங்களான பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் மற்றும் சூப்பர் பாஸ்பேட் உரங்களை மூடையில் அச்சிடப்பட்ட விலைக்கு மிகாமல் விற்பனை செய்யப்பட வேண்டும். விவசாயிகள் அனைவரும் உர மூடையில் அச்சிடப்பட்டுள்ள விலையை பார்த்து உரம் வாங்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை, வேளாண்மை இயக்குநர் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர்(பொ) அவர்களின் அறிவுரைப்படி உர விற்பனை நிலையங்களில் உயர் அலுவலர்கள் மற்றும் கள அலுவலர்களால் திடீராய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உர விலை மற்றும் இருப்பு விபரம் அடங்கிய தகவல் பலகை விவசாயிகளின் பார்வைக்கு தெரியும்படி விற்பனை நிலையங்களில் வைக்கப்படவேண்டும். சில்லரை உர விற்பனையாளர்கள் ஆதார் அட்டை கொண்டு கைரேகை பதிவு செய்து விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்ய வேண்டும். உரம் வாங்க செல்லும் அனைத்து விவசாயிகளும் தவறாது ஆதார் அட்டையை எடுத்து சென்று உரம் வாங்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உர விற்பனையாளர்கள் உரங்களை உர உரிமத்தில் அனுமதி பெற்ற இடங்களில் மட்டும் இருப்பு வைத்து விற்பனை செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு கட்டாயமாக விற்பனை பட்டியல் வழங்க வேண்டும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 5 மூட்டை உரங்கள் மட்டுமே விற்பனை செய்தல் வேண்டும். அனைத்து விவசாயிகளும் பயிருக்கு ஏற்ற உரப்பரிந்துரையின்படி உரமிட்டு செயற்கை உரத் தட்டுப்பாட்டை தவிர்த்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், தேவைக்கு அதிகமாக உரமிடுதலையும் தவிர்த்திட அனைத்து விவசாயிகளும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விவசாயிகள் கேட்கும் உரங்கள் மட்டும் விற்பனை செய்ய வேண்டும். வியாபார நோக்குடன் வேறு பிற உரங்களை கேட்கும் உரத்துடன் சேர்த்து வாங்குமாறு விவசாயிகளை கட்டாயப்படுத்த கூடாது எனவும் அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறான நிகழ்வுகளில் சம்பந்தப்பட்ட உர விற்பனை நிறுவனத்தின் மீது கடுமையான நடவடிக்கை தொடரப்படும்.

உயர் அலுவலர்கள் மற்றும் கள அலுவலர்கள் திடீர் ஆய்வுகள் மேற்கொண்டு சட்டம் விதி மீறல்கள் ஏதும் கண்டறியப்பட்டால் அத்தியாவசிய பொருட்கள் சட்டம் -1955 மற்றும் உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985-ன் படி நடவடிக்கை தொடரப்பட்டு விற்பனை தடை விதிப்பதுடன் உர விற்பனை நிலையங்களின் உர உரிமம் இரத்து செய்யப்படும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்(பொ) திரு.காமாட்சி கணேசன் அவர்கள் எச்சரிக்கிறார்கள். கடந்த மூன்று நாட்களில் மாவட்டத்தில் உள்ள 82 உர விற்பனை நிலையங்களில் திடீராய்வு மேற்கொண்டு சட்ட விதி மீறல்களுக்காக இதுவரை நான்கு உர விற்பனை நிலையங்களில் விற்பனை தடை

செய்யப்பட்டுள்ளது. உர விற்பனை நிலையங்களின் உரிமங்களை தற்காலிக நிறுத்தம் செய்திடவும் நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது.

உர வணிகம் தொடர்பான புகார்களை உடனுக்குடன் விசாரிக்க மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் கண்காணிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. புகார் தெரிவிக்க விவசாயிகள் கீழ்க்கண்ட கைப்பேசி எண்களில் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. மாவட்ட அளவில் வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு)-9443094193, வேளாண்மை அலுவலர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு)-9443861390, வட்டார அளவில் வேளாண்மை உதவி இயக்குநர், இராமநாதபுரம் -9788516733, வேளாண்மை உதவி இயக்குநர், (திருப்புல்லாணி மற்றும் உச்சிப்புளி) -9443226130, வேளாண்மை உதவி இயக்குநர், (திருவாடானை மற்றும் ஆர்.எஸ்.மங்கலம்) -9750052410, வேளாண்மை உதவி இயக்குநர், (பரமக்குடி) -9443619721, வேளாண்மை உதவி இயக்குநர், (நயினார்கோவில் மற்றும் சத்திரக்குடி)-9443090564, வேளாண்மை உதவி இயக்குநர், (கமுதி) -8870167153, வேளாண்மை உதவி இயக்குநர், (முதுகுளத்தூர்) -9443642248, வேளாண்மை உதவி இயக்குநர், (கடலாடி) -9942237653.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் (பொ) திரு.ஆ.ம.காமாட்சி கணேசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**